**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.101/2018**
**Prosecution Witnesses : 9**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மீனா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பாலமுருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாநகர் திலகர் திடல் தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 10.07.2017ம் தேதி திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் 16.00 மணிக்கு வில்லுரை சேர்ந்த சங்கரேஷ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 71/2017 ச/பி. 498(A), 406, 294(b), 506(1) , 494 IPC வாக வழக்கு பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையும் புகார் மனுவையும் இணைத்து குற்றவியல் நீதிமன்றம் நடுவர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. பின்பு இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சி சங்கரேஷ்வரி, மாரியப்பன், அண்ணபுஷ்பம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கின் 2 முதல் 5 வரையிலான எதிரிகள் 24.07.2017ம்

தேதி Crl.MP.No.3752/2017 ன் படி மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மதுரை அவர்களின் ஆணைப்படி முன்பிணையில் விடுவிக்கபட்டதால் அவர்கள் கைது செய்யப்படவில்லை. பின்பு 1ம் எதிரிக்கு 04.08.2017ம் தேதி Crl.MP.No.4196/2017 ன் படி மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மதுரை அவர்களின் ஆணைப்படி முன்பிணையில் விடுவிக்கபட்டதால் அவர் கைது செய்யப்படவில்லை. பின்பு சாட்சிகள் முத்துகருப்பன், மணி, முனியாண்டி, ஆகியோர்களை 10.12.2017ம் தேதி தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு நான் பணியிட மாறுதலில் ராஜபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றதால் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் திருமதி. சுமதி அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி:**

அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கைக்கு உரிய புகார் எனக்கு 10.07.2017ம் தேதி கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி தரப்பு சான்று ஆவணம். D1 எங்களது காவல் நிலையத்தில் இருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் கொடுக்கப்பட்டிருக்கிறது புகார் அ.சா.1 ஆல் கடந்த 23.06.2017ம் தேதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் புகாருக்கு முன்பு 17 நாளுக்கு முன்னதாக Exbt.D1 கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் புகாரில் அ.சா.ஆ.1ல் யார் அ.சா.1க்கு 1 முதல் 4 எதிரிகளும் பாலை குடிக்க சொல்லி மிரட்டியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த பாலை குடித்த சிறிது நேரத்தில் நான் மயங்கிவிட்டேன் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிரி தரப்பு ஆவணமான Exbt.D1ல் அ.சா.1 ன் கணவர் அ.சா.1 னிடம் ஊரில் என்னை அவமானப்படுத்திவிட்டார்கள், அதனால் நானும் நீயும் உயிருடன் இருக்க வேண்டாம் செத்துவிடுவோம் என என்னை மிரட்டி அவர் கையில் இருந்த 2 பாட்டிலில் இருந்த 1 பாட்டில் உள்ள விஷத்தை நீ குடி நான் இந்த பாட்டில் விஷத்தை குடித்து செத்துவிடுவோம் என என்னை கட்டாயப்படுத்தி என்னை விஷத்தை குடிக்க வைத்துவிட்டு அவர் விஷத்தை குடிப்பதுபோல் நடித்துவிட்டார். நான் விஷம் குடித்து மயங்கியதை அறிந்து என்

பெற்றோர்கள் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள் என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். Exbt.D1 மனுவை நான் தான் பெற்று அந்த மனுவை முடித்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் Exbt.D1ல் மற்றும் Exbt.P1 லும் விஷம் குடித்ததாக சொல்லும் தேதி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 10.07.2017ம் தேதி 25 பவுன் நகை போடப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. Exbt.D1ல் 35 பவுன் போடப்பட்டதாக சொல்லியிருக்கிறார்கள். 10.07.2017ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரில் 29.05.2017ம் தேதி என் கணவர் வீட்டுக்கு சென்ற போது 1 முதல் 4 வரையானவர்கள் எதுக்குடி இங்கு வந்தாய் என்று அடித்ததாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். ஆனால் 23.06.2017ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரில் Exbt.D1ல் அந்த விஷயம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் 5ம் எதிரிக்கும் திருமணம் நடந்ததற்குரிய ஆவணங்கள் எதாவது எனது புலன் விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. சாட்சி முனியாண்டி என்பவரை நான் விசாரிக்காமலேயே அவரை விசாரித்ததாக வாக்குமூலம் உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 நடக்காத சம்பவங்களை தானாகவே கற்பனையாக உற்பத்தி செய்து முன்னுக்குபின் முரணாக பல புகார்களை தந்து எதிரியின் குடும்பத்தை அழைக்களிக்க செய்ய வேண்டும் என்பதற்காக இந்த பொய்யான புகார் கொடுக்கப்பட்டதை நான் ஏற்கனவே என்னிடம் தரப்பட்ட புகாரோடு ஒப்பிட்டு பார்க்காமலும் சரிவர புலன் விசாரணை செய்யாமலும் முதல் புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எத்தகைய குற்ற செய்கையும் அ.சா.1க்கு எதிராக செய்யவில்லை என்றால் சரியல்ல.

**5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டதால் அந்த மேற்படி எதிரிகளின் குறுக்கு விசாரணையை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை** இல்லை.